RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2446

OPEN ACCESS

# சாகித்திய அகாடமி பரிசுப் பெற்ற அப்துல் ரகுமானின் ஆலாபனையில் சமுதாய சிந்தனை

இரா. கார்த்திகேயன் [அ, *], ஆ. இராமலிங்கம் [அ]

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு, தமிழ்நாடு, இந்தியா

# Social Thought in Sahitya Akademi Award Winner Abdul Rahman's Alapana

R. Karthikeyan [a, *], A. Ramalingam [a]

[a] Department of Tamil, Erode Arts and Science College (Autonomous), Erode-638009, Tamil Nadu, India

* Corresponding Author: karthikeyanes@gmail.com

Received: 27-04-2024
Revised: 03-08-2024
Accepted: 10-08-2024
Published: 15-08-2024

Check for updates

**ABSTRACT**

Poet Abdul Rahman presents many social thoughts in his collection of poems. Through the poem Confession. Men destroy the incomparable seed of the human race of women, time destroys those who are beautiful to the eye, and those who are beautiful to the ears adorn death. Climb up to the heart! You say that there is a kingdom waiting for you, and that death means destruction. Haven't you noticed that it is complete? He also says. Thus this essay examines social thoughts through the medium of many poems with the help of alapana.

**Keywords:** Abdul Rahman, Social Thoughts, Human Race, Works

## முன்னுரை

ஆலாபனை கவிதைத்தொகுப்பில் பல சமூகச்சிந்தனைகளை கவிஞர் எடுத்துரைக்கிறார். ஒப்புதல் வாக்குமூலம் என்ற கவிதையின் மூலம். பெண்கள் என்ற மனித இனத்தின் நிகரில்லா வித்தினை ஆண்கள் அழிக்கிறோம் என்றும், கண்ணுக்கு அழகாக இருப்பவர்களைக் காலம் சிதைத்துவிடுகிறது, காதுக்கு அழகாக இருப்பவர்கள் மரணத்தையும் அலங்காரமாக்கிக் கொள்கிறார்கள் என்றும், வயிற்றில் விழுந்து கிடப்பவனே! மேலே இதயத்திற்கு ஏறு! அங்கே உனக்கான ராஜாங்கம் காத்திருக்கிறது என்றும், மரணம் என்றால் அழிவு என்கிறாய்| அது நிறைவு என்பதை நீ கவனித்ததில்லையா? என்றும் கூறுகிறார். இவ்வாறாக பல கவிதைகளின் வழி சமூகச்சிந்தனைகளை ஆலாபனையின் துணைகொண்டு இக்கட்டுரை ஆராய்கின்றது.

## பெண்ணின் நிலை

யாதுமாய் நிற்பவள் பெண். தாயாக, சகோதரியாக, மனைவியாக, மகளாக யாதுமாய் திகழும் பெண்ணின் நிலை இச்சமூகத்தில் எவ்வாறு உள்ளது? கற்புக் கோட்பாடு பெண்ணுக்கு மட்டும் உரியதாய் கருதப்படுகிறது, ஆண்களுக்கு அது வகுக்கப்படவில்லை. அவதாரங்களையும், தீர்க்காதிசிகளையும் பெறுகிறவள் பெண்தான் ஆனால் இலக்கணங்கள் பெண்களுக்கு மட்டுமே. இதனை கவிஞர்

“நீ உன்னை விற்றால் அது விபச்சாரம்

நாம் எங்களை விற்றால்

அது திருமணம்" (அப்துல் ரகுமான்., 2023)

மேலும் பெண் மனதால் வலிமை உடையவள், அதனால் தான் அன்பு எனும் ஆயுதம் கொண்டு பெண்ணை வீழ்த்துகிறோம், பல நேரங்களில் தாலியே அவளுக்கு விலங்காகிறது என்று கவிஞர் சுட்டிக்காட்டுகிறார்.

"காதல் கூட

நாம் உனக்கு விரிக்கும் வலைதான்

தாலிகூட

நாம் உனக்குப் பூட்டும் விலங்குகள்"- (அப்துல் ரகுமான்., 2023)

என்று பெண்ணின் நிலையை எடுத்துக்காட்டுகிறார். பெண்ணைப் போற்றி வளர்க்க வேண்டும் என்பார்கள். ஆரோக்கியமான சமுதாயம் அமைய பெண்தான் மூலம். பெண்களின் உலகில் ஆசைகள் அதிகம் இருக்கும். ஆனால் அவர்களின் விருப்பங்கள் குறைவாக இருக்கும். எதிர்பார்ப்புகள் அதிகம் இருக்கும், ஆனால் அனைத்தையும் தன்னுள்ளே அடக்கிவைப்பாள். அவள் முன் ஒவ்வொரு ஆணும் தலை குனிந்து நிற்கிறோம், பெண்மை எனும் தெய்வீக நெருப்பிள் ஆண்கள் தங்களைப் பரிசுத்தப்படுத்துகிறார்கள்.

## இறைவனின் குரல்

கவிஞர் ஆலாபனையில் தவறான எண் எனும் கவிதை மூலம் தனது கேள்விக் கனைகளை இறைவன் மீது தொடுக்கிறார். இறைவனிடம் எதற்கும் பதிலில்லை. இந்த சமூகம் இறைவன் பெயரைக் கொண்டு பல தீச்செயல்களைப் புரிகிறது. மதப்பூசல்களால் ஏற்படும் விளைவுகளைச் சுட்டிக் காட்டுகிறார் கவிஞர். ஒன்றே குலம்; ஒருவனே தேவன் என்பதை உணர்த்துகிறார். தங்கள் மதத்தைத் தவிர வேறு மதமே இல்லை என்று நினைப்பவர்களை சாடுகிறார்.

"இங்கே என்ன நடக்கிறது என்று பார்

இதோ உனக்கு வீடு கட்டுவதற்காகவே

உன் வீட்டை இடிக்கும் மூடர்கள்" - (அப்துல் ரகுமான்., 2023)

"ஆலய மணி ஓசையும்

மசூதியின் அழைப்பு ஒலியும்

காற்றில் கரைந்து சங்கமிக்கும் அர்த்தம்

இவர்களுக்கு எப்போது விளங்கும்

கடைசியாக கேட்கிறேன்

நீ இந்துவா முஸ்லிமா

ராங் நம்பர் என்ற பதிலோடு

இணைப்பு துண்டிக்கப்பட்டது" - (அப்துல் ரகுமான்., 2023)

மேலும் வானம் பார்த்த மனிதன் பறவையை கண்டான். கண்டபொழுதில் இறைவனிடம் கேட்டான் உனது படைப்பில் மனிதர்கள் உச்சம் என்றால் எங்களுக்கு ஏன் பறவைகளைப் போல் சிறகுகளைத் தரவில்லையென. இறகுகளால் இல்லாத சிறகை இறைவன் நமக்கு தந்திருப்பதை அறியாமல். மனிதன் பெற்ற விடுதலையையும் அறியாமல். இதனை கவிஞர் சுட்டிக்காட்டுகிறார்

"பறப்பது என்பது மேலே உயர்வது

பறப்பது என்பது விடுதலையாவது" - (அப்துல் ரகுமான்., 2023)

மனிதன் தன்னிடம் உள்ள விடுதலையை இன்னும் அறியாமலையே வாழ்கிறான்.

## மனித வாழ்க்கை

ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒன்றை செய்ய வேண்டும் என்று நினைப்பான். ஆனால் எண்ணத்திற்கு முரணாக இங்க வாழ்க்கை பலருக்கும் அமைந்துவிடுகிறது. ஆனால்அது தான் வாழ்க்கை.அதிலிருந்து கற்று மேலே வர வேண்டும். சமாதியில் மலர்ந்து சிரிக்கும் பூவைப்போல.

“கடைசிப் பக்கங்கள்

கிழிந்து போன

துப்பறியும் நவீனத்தைத்

தெரியாமல் எடுத்துப் படித்திருக்கிறீர்களா

அதுதான் வாழ்க்கை” - (அப்துல் ரகுமான்., 2023)

முரண் மட்டும் அல்ல போராட்டமும் வாழ்க்கையில் உள்ளது. ஆனால் அந்த போராட்டம் ஒர் புதிய படைப்பை உருவாக்கலாம், சக்தியை வெளிப்படுத்தாலாம் அதில் நாம் தோற்றுவிடக் கூடாது என்பதை கவிஞர் உணர்த்துகிறார்,

“போராட்டத்தினால் தான் நீ

துருப்பிடிக்காமல் இருக்கிறாய்

போராட்டமே உன்னைக் கூர் தீட்டும்

சானைக் கல்லாய் இருக்கிறது” - (அப்துல் ரகுமான்., 2023)

## பாதைகள்

பல்வேறு பாதைகள் இருக்கும் இவ்வுலகில் இதயத்திற்குப் போகும் பாதையை மட்டும் காணவில்லை. அதனால்தான் மனிதன் இன்னும் ஊர்ப்போய்ச் சேரவில்லை எனக் கூறும் கவிதை தான் பாதைகள் எனும் தலைப்பில் அமைந்த கவிதை. எத்தனை வகையான பாதைகள், கால் நடக்கும், கண் நடக்கும், மனம் நடக்கும் பாதைகள் என பல பாதைகள் நம்மிடம் உண்டு. நேரான, குறுகலான, பகிரங்கமான, ரகசியமான என பல பாதைகளும் உண்டு. புனித தலங்களுக்கு செல்லும் பாதைகளும் உண்டு சிறை சாலைக்குச் செல்லும் பாதைகளும் உண்டு ஆனால் ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடம் செல்வதற்கென செல்வதற்கான அன்பின் பாதை அறத்தின் பாதை மட்டும் காணவில்லை. அதனால் தான் மனித இனம் தன் ஊர் செல்லாமல் பாதையைத தொலைத்து தன் இடத்தை சேர முடியாமல் இருக்கின்றது. இதனை கவிஞர் தனது கவிதையில் சுட்டிக்காட்டுகிறார்.

“எத்தனை வகையான பாதைகள்

ஆனால்

ஒரே ஒரு பாதை மட்டும்

காணோம்

இதயத்திற்குப் போகும் பாதை..

அதனால் தான்

மனிதன் இன்னும்

ஊர்போய்ச் சேரவில்லை” - (அப்துல் ரகுமான்., 2023)

## மனித புத்தி

பறவைகளின் சுதந்திரத்தை விலங்குகளின் கள்ளங்கபடற்ற தன்மையை மனிதன் கற்றுக்கொண்டிருக்கலாம் எனக் கூறும் கவிதை தான் மனிதபுத்தி. மனிதன் எவ்வாறு விலங்குகளையும் பறவைகளையும் தனது தேவைக்காக பயன்படுத்தி தான் விளங்காக மாறுகின்றான் என்பதை மிகத் தெளிவாக உணர்த்தியுள்ளார்.

மனிதனின் சுயநலம் விலங்கினங்களின் சுதந்திரத்தையும் விலங்கினங்களின இயல்பான வாழ்க்கை முறையும் எந்த அளவுக்கு பாதிக்கின்றது என்பதை உணர்த்துகிறார் சுதந்திரமாக கள்ளங்கபடற்ற தன்மை உடைய பறவைகள் இங்கு கூண்டுக்குள் சுதந்திரமற்று தன் சிறகை மறந்து மனிதனைப் போல் வாழ்கிறது என்கிறார்.

மனிதனுக்கு எதிர்காலத்தை கூறிவிட்டு கூண்டுக்குள் அடைப்பற்றிருக்கும் கிளி, பூம்பூம் மாட்டுக்காரன் சொல்வதற்கெல்லாம் அந்த மாடு தலையாட்டி கொண்டிருந்தது மனிதனைப் போல மாறிய மாடு, கம்பீரமான யானை பிச்சை வாங்கிக்கொண்டிருந்தது இவ்வாறான ஆழமான சிந்தனைகளை உணர்த்துகிறார் கவிஞர்.

“கிளி

மனிதனால்

மனிதனாக்கப்பட்டுவிட்டது

மாடு

மனிதனால்

மனிதனாக்கப்பட்டுவிட்டது

யானை

பிச்சை வாங்கிக்கொண்டிருந்தது

மனிதனைப் போல

என் மனம் அழுதது

பறவைகளின் சுதந்திரத்தை

விலங்குகளின் கள்ளங்கபடற்ற தன்மையை

மனிதன் கற்றுக் கொண்டிருக்கலாம்

இந்த உலகம் அழகாக இருந்திருக்கும்

ஆனால் அவனோ

பறவைகளுக்கும் விலங்குகளுக்கும்

மனித புத்தியைக்

கற்றுக் கொடுத்து விட்டான்

விலங்கிலிருந்து மனிதனானது

பரிணாம வளர்ச்சி தானா? - (அப்துல் ரகுமான்., 2023)

பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் மனித புத்தியை கற்றுக் கொடுத்து விட்டான் என்ற வரிகளில் உயர்திணைகளா இருக்க வேண்டிய மனிதர்கள் அஃறினைகளாய் மாறி வருவது வேதனையை தரக்கூடியது என்ற உண்மை வெளிப்படுகின்றது.

## மரணம் என்ற அழகு

மரணம் என்றால் அழிவு என்கிறோம் ஆனால் அது நிறைவு என்பதை யாரும் எண்ணவில்லை. ஒன்றின் மரணம் மற்றொன்றின் தொடக்கம் பகல் மரணம் அடையவில்லை என்றால் அழகான நட்சத்திரங்களை பார்க்க முடியாது. இரவின் மரணம் தான் விடியலின் அழகு. பூவின் மரணத்தில்தான் காய் பிறக்கின்றது. புழமையின் மரணம் இல்லையென்றால் புதுமையை வரவேற்க இயலாது என்பதை கவிஞர் சுட்டிக்காட்டுகிறார்.

“மரணம் என்றால்

முடிவு என்கிறாய்

அது நிறைவு” - (அப்துல் ரகுமான்., 2023)

## காதல்

வாழ்க்கையை வழங்கும் காதலை புறக்கணித்து, மரணத்தை அளிக்கும் காமத்தை ஏன் தேர்ந்தெடுக்கிறீர்கள் என தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்.

“காமம்

உங்களுக்குள் இருக்கும்

மிருகத்தை அவிழ்த்துவிடு;கிறது.

காதல்

உங்களுக்குள் இருக்கும்

தெய்வீகத்தை வெளிப்படுத்துகிறது” - (அப்துல் ரகுமான்., 2023)

மேலும் நம்மை பிரசவிப்பது நம் பெற்றோர்கள் அல்ல, நம்மை நாம்தான் பிரசவிக்க வேண்டும் என்றும் கூறுகிறார். மேகத்திலிருந்து மழையைப் போல், மலரிலிருந்து மணத்தைப் போல் நம்மிலிருந்து நாம் உதிக்க வேண்டும்.

“வாழ்க்கை என்பதே

உண்மையில்

மனிதன் தன்னைத்தானே

பிரசவிக்க

முயலும் முயற்சிதான்” (அப்துல் ரகுமான்., 2023)

## முடிவுரை

கவிஞர் எழுதிய ஆலாபனைக் கவிதை மனித சமுகத்திற்கான பல சிந்தனைகளை வெளிப்படுத்துகிறது. இந்நிலையை மாற்ற இளைய சமுதாயம் முனைய வேண்டும். தெளிவு கொண்டால் மனிதனும் மண்ணும் மகத்துவம் பெறும்.

## References

அப்துல் ரகுமான்., (2023) ஆலாபனை, நேஷனல் பப்ளிஷர்ஸ், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author's 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License